# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 145/2023

| | |
|---|---|
| | Prosecution PW 6 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 14.10.2025

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் முருகேசன் அவர்களுடன் பணிபுரிந்து வகையில் அவருடைய கையெழுத்து எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.08.2020ம் தேதி 14.00 மணிக்கு தலைமை காவலர் முருகேசன் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த நாராயணன் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையக் கு.எண்.569/2020, ச.பி.294(பி),323,324,506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு

செய்துள்ளார். வழக்கினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் பாண்டியன், விக்னேஷ் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைடம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் 15.30 மணிக்கு தயார் செய்தேன். **மாதிரி வரைடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் எதிரியை தேடி வந்தபோது, நான் 26.11.2020 ம் தேதி பணி மாறுதலாக வாங்கல் காவல்நிலையம் சென்றுவிட்டதால் மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் கண்ணதாசனிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

1. அன்றைய தினத்தில் நான்தான் நிலைய பொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். தனி நபரிடமிருந்து புகாரோ, மருத்துவமனையில் இருந்து விபத்து சம்மந்தமான பிரச்சனை சம்மந்தமாக தகவல்கள் நிலைத்திற்கு வரப்பெற்றால் நிலைய பொறுப்பு அதிகாரி என்ற வகையில் என்னிடம் தகவல் கூற வேண்டும் என்றால் சரிதான். அதே போல இந்த பிரச்சனை சம்மந்தமாக மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை என்னிடம் கூறினார்களா என்றால் கூறினார்கள். பிரச்சனை சம்மந்தமாக வழக்கு பதிய வேண்டும் என்றால் என்னிடம் கேட்டுதான் பதிய வேண்டும் என்றால் சரிதான். வழக்கை பதிவு செய்த தலைமை காவலர் அவ்வாறு என்னுடைய மேல் அதிகாரியிடம் கேட்டுத்தான் வழக்கை பதிவு செய்தேன் என்று புகாரிலோ, அவருடை ஸ்டேட்மெண்டிலோ கூறியுள்ளாரா என்றால் இல்லை. காயமடைந்தவரிடம் நான்தான் புகார் வாக்குமூலம் வாங்கினேனா என்றால் முதல் நிலைக் காவலர் முருகேசன் வாங்கினார். மு.நி.கா. முருகேசன் நான் மருத்துவனைக்கு சென்று காயமடைந்தவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்று குறிப்பிட்டு தன்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் நான் என்ற வார்த்தை இல்லை. காயமடைந்தவரிடமிருந்து யார் பெற்று வந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் முருகேசன் அவர்கள் பாதிக்கப்பட்டவரிடமிருந்து வாக்குமூலம் பெற்று வந்ததன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட முதல் தகவல் அறிக்கையை நான் மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். சம்பவ இடத்திற்கு நான்தான் சென்று பார்வை மகசர் தயார் செய்தேன். சம்பவ இடத்தின் மேல் பகுதியில் உள்ள வயலின் உரிமையாளர் லோகாம்பாள், கண்ணையன் ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 28.08.2020 ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். மருத்துவமனையில் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட நேரம் 27.08.2020 ம் தேதி 17.00 மணி என்றால் சரிதான். அ.சா.5 முறையாக பெறாத வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நான் எதிரிக்கு எதிராக பொய்யான சாட்சியங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**